## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

## STC. No. 275/2022

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி– 1(PW–1) **–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்**அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பரிமேள்ழகர்** | தொழில் | | **விவசாயம்** |
| த/பெ. | : | **துரைஅய்யா** | ஊர் | | **கூடநாணல்** |
| வயது | : | 64 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**06.11.2025**

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்யவில்லை. எனக்கு வியபாரம் எதுவும் இல்லை. நான் அரசு பணியிலும் இல்லை. எனக்கு விவசாயத்தில் மட்டும் தான் வருமானம் என்றால் சரிதான். நெல் சாகுபடியில் வரும் வருமானம் மட்டும் தான் என்றால் சரிதான். இரண்டு போகம் நெல் விவசாயம். நான் தனியார் வியாபாரிகளிடம் மட்டும் தான் நெல் விற்பனை செய்வேன். அரசு கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்வதில்லை. ஒரு போகத்திற்கு நெல் விவசாயத்தில் ரூபாய் 5,00,000 வருமானம் கிடைக்கும். நான் சொந்தமாக 9 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்கிறேன்.

2) 4 வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். திருக்காட்டுப்பள்ளி DBS (முன்பு லெட்சுமி விலாஷ் என்ற பெயர்). SBI திருவையாறு, தஞ்சாவூர் பேங் ஆப் பரோடா, திருக்காட்டுப்பள்ளி சிட்டி யூனியன் வங்கி, ஆகியவற்றில் கணக்கு வைத்துள்ளேன். அனைத்தும் சேமிப்பு கணக்குதான் என்றால் சரிதான். 1,00,000 ரூபாய் என்னை பொறுத்தவரையில் பெரிய தொகை என்றால் சுமாரான தொகை. விவசாயம் வருமானத்தை தவிர எனக்கு வேறு எந்த வருமானமும் இல்லை. எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால், பக்கத்து ஊர் தெரிந்தவர், ஒருவகையில் தூரத்து சொந்தம்.

3) 2019 ஆம் ஆண்டில் எதிரி என்ன வேலைப்பார்த்தார் என்று எனக்கு தெரியாது என்றால், திருக்காட்டுப்பள்ளி முத்து பைனாஷ் கம்பெனியில் வேலை பார்த்ததாக சொன்னார். அது உண்மையா என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு என்ன மாத வருமானம் என்றும் எதிரி என்ன வேலைப்பார்த்தார் என்றும் எனக்கு தெரியாது. எதிரிக்கு என்ன சொத்து உள்ளன என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் வீடு மற்றும் 1, 2 ஏக்கர் சொத்தும் உள்ளது. எதிரி திருமணம் ஆனவரா? அவர் குடும்பத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. திருமணம் ஆனவர் ஒரு ஆண் மற்றும் பெண் குழந்தை உள்ளது. உள் ஊரிலேயே திருமணம் செய்துள்ளார்.

4) நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூபாய் 4 இலட்சம் ஒரே தவணையில் கொடுக்கப்பட்டது. எதிரி என்னிடம் தொகை கேட்ட அன்றே தொகையை கொடுத்தேனா என்றால் ஏற்கெனவே கேட்டுயிருந்தார் 25.02.2019 ல் கொடுத்தேன். எதிரி ஏற்கெனவே தொகை கேட்டதாக எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ, சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் இருந்து எவ்வளவு காலத்திற்கு முன்பு எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால், நான்கு நாட்களுக்கு முன்பு கேட்டார்.

5) நான்கு நாட்களுக்கு முன்பு கேட்டார் என்பதையும் எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ, சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்ற விபரத்தை எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ, சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு எங்கு வைத்து நான் பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு எனது வீட்டில் வைத்து நான் பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை எனது வாக்குமூலத்தில் தான் முதன் முதலில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

6) நான் கொடுத்ததாக சொல்லும் பணத்தை எதிரிக்கு யார் முன்னிலையில் கொடுத்தேன் என்ற விபரத்தை எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் நேரடியாக கொடுத்தேன் யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் சங்கதியும், நேரடியாக கொடுத்தாக சொல்லும் சங்கதியும் பொய்யானவை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எப்போது, எங்கு வைத்து எதிரியால் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) வழக்கு காசோலை முன் தேதியிட்ட காசோலையா பின்தேதியிட்ட காசோலையா என்று என்னால் சொல்ல இயலாது என்றால் 22 ஆம் தேதி காசாக்கிக்கொள்ளுமாறு அதில் இருந்து மூன்று நான்கு நாட்களுக்கு முன்பு கொடுத்தார்.

**வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.